**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**O.S.No.194/2023**

20.07.2026

பி.வா.சா.2 திருப்பதிராஜா

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வரவு செலவு வழக்கு சம்பந்தமாக நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன். பிரதிவாதி என்னுடைய உறவினரா என்றால் ஆம். நான் ஆட்டோ ஓட்டுவதாகச் சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வாதியிடம் கடன் பெற்றிருந்தேன் என்பதைக் காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி தாக்கல் செய்துள்ள புரோ நோட்டில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் செய்யவில்லை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட வரவு செலவு குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும்.

2. பிரதிவாதி எங்கு சென்றாலும் என்னிடம் சொல்லிவிட்டுத்தான் செல்வாரா என்றால் குறிப்பிட்ட விசயத்தை என்னிடம் சொல்வார். சாட்சியமளிப்பதற்கு எனக்கு நிதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. பிரதிவாதி அழைத்ததன்பேரில்தான் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். வாதி ரூ.95,000/- கேட்டு பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா கடனுறுதிச் சீட்டில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி 10.10.2021ம் தேதியன்று வாதியிடம் ரூ.95,000 பெற்றுக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் புரோ நோட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :- இல்லை.

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.07.20 16:52:03 +0530

Additional Sub Judge,
Palani.